# பொல்பிதிகம பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஜுன் 20 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செம்டம்பர் 30 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொல்பிதிகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 திசெம்பர் மாதத்திற்கான மீளாய்வாண்டு ஜுன் மாதம் கிடைத்திருந்த ரூபா 1,214,500 இற்கான நீதிமன்ற தண்டப்பணம் வருமானம் மீளாய்வாண்டிற்கான வருமானம் என நிதிக் கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் வருமான கடன்பட்டோர் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்கள் தொடர்பாக பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத்தினையும் இனம் கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய சம்பள மீளளிப்பு வருமானம் ரூபா 1,497,474 இனை 37 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் ரூபா 1,208,475 தொகை ஒன்று கணக்கீடு செய்திருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் வருமான கடன்பட்டோர் ரூபா 288,949 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(இ) சபைக்கு நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த ரூபா 1,479,000 டிரக்டர் வண்டியின் பெறுமதி மூலதன பெறுவனவுகள் மற்றும் மூலதன செலவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திக் கடனுக்காக 2013 ஜுன் மாதம் செலுத்தப்பட்ட ரூபா 134,643 இற்கான கடன் மற்றும் வட்டி தவணைப் பணம் பங்குலாபம் மற்றும் மிகையூதிய(506) கணக்கிற்கு மற்றும் மூலதன சொத்துக்கள் திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு(504) ஆகிய செலவுக் கணக்கிற்கு ஆகிய இரண்டு கணக்குகளுக்கும் வரவு வைக்கப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான செலவு ரூபா 134,643 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு வைப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 84,967 இனை ஆண்டிற்கான செலுத்த வேண்டிய செலவுகள் எனவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான செலவுகள் மற்றும் கடன்கொடுத்தோர் ரூபா 84,967 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 27,579,375 இற்கான நிர்மாண வேலை கடன்பட்டோர் பெறுமதி நாட்குறிப்பு இலக்கம் 55 இன் மூலம் கடன்பட்டோர் என ரூபா 26,295,358 கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் வருமான கடன்பட்டோர் ரூபா 1,284,017 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) 2012 மாகாண குறிப்பிட்ட மற்றும் பெருந்தெருக்கல் அமைச்சு உதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளுக்காக மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 14,993,938 தொகையினை திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு பதிலாக மூலதன உதவி கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் அதே தொகையில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுபாட்டுக் கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மீதியின் கீழ் இரண்டு கணக்கு விடயங்களில் கணக்குகளின் பிரகாரம் மற்றும் தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் காணப்பட்ட நேரொத்த பெறுமதிகளிடையே ரூபா 1,890,690 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டிருந்தன.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கணக்குகளிடையே மாற்றம் என ரூபா 3,044,376 இற்கான தொங்கல் தன்மையுள்ள வரவு மீதியொன்று நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 29,485,897 ஆகக் காணப்பட்டதுடன் ரூபா 1,357,675 அவற்றில் 1 உம் 3 உம் வருடங்கள் இடையே காலப் பகுதியை சேர்ந்தவையாகும்.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 37,099,702 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 3,547,395 3 வருடத்தை மிகைத்த காலத்தை சேர்ந்தவையாகும்.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 2,122,758 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விரிவான பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

2 நிதி மீளாய்வு

----------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,381,107 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,687,818 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 2,306,711 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது. நிதி விளைவிற்கு ரூபா 83,385,023 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 58,559,695 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 26,206,435 வரை அதிகரித்துள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

--------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு தொடர்பாக சபையின் மொத்த மீண்டுவரும் வருமானங்கள் ரூபா 33,723,349 இல் நூற்றிற்கு 80 ஆகிய ரூபா 27,075,426 தொகை உருவாக்கிய வருமானமல்லாத பெறுவனவுகளின் அடங்கியுள்ளது. ரூபா 83,385,022 இற்கான மொத்த மூலதன வருமானம் வேறு நிறுவனங்களில் இருந்து அதிகார பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகளுக்காக கிடைத்த பணம் அடங்குகின்றது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவாகிய ரூபா 32,342,245 இல் நுற்றிற்கு 67 ஆகிய ரூபா 21,609,215 தனிப்பட்ட சம்பள செலவு ஆக காணப்பட்டதுடன் அவற்றில் நூற்றிற்கு 85 ஆகிய ரூபா 18,305,740 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரிடம் கிடைத்து வேறு வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மூலதன செலவாகிய ரூபா 58,559,695 இல் நூற்றிற்கு 1 ஆகிய ரூபா 599,874 தொகை மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் மீதியின் நூற்றிற்கு 99 ஆகிய ரூபா 57,959,821 தொகை மகநெகும, கமநெகும ஆகிய மூலங்கள் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் அடங்கியுள்ளன.

2.3 வருமான நிருவாகம்

--------------------------------

2.3.1 வருமான சேகரித்தல் செயலாற்றுகை

------------------------------------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158 மற்றும் 1988 பிரதேச சபை(நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவையின் விதி 33 இன் பிரகாரம் குறிப்பிட்ட காலத்திற்கு சாட்டப்படும் எழுத்தாணை மீதி வீதவரி மற்றும் ஏக்கர்வரி வெளிக்களத்தில் சேகரிக்கமுடியும். அத்துடன் அது தவிர வியாபார அனுமதிப்பத்திரம் மற்றும் கடை வாடகை வருமானம் வெளிக்களத்தில் சேகரித்தலுக்காக பிரதேச சபை சட்டத்தின் அல்லது விதி கோவையின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள குறிப்பிட்ட அதிகாரம் அளித்தல் மேற்கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்களை இணங்காண முடியாதிருந்தது.

2.3.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

---------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரினால் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 330,750 ஆகும்.

2.3.3 ஏனைய வருமானங்கள்

------------------------------------

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 149 இன் பிரகாரம் சபையின் அதிகார பிரதேசத்தில் காணப்படும் இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் அதிகார சபையில் பதிவு செய்துள்ள ஹோட்டல்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளில் இருந்து புரள்வுகளின் மீதி நூற்றிற்கு 1 இனை மிகைக்காத கட்டணம் ஒன்றினை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அங்கீகரித்திருந்த தொலைதொடர்பு செலுத்துகை டவர்கள் ஒழுங்குபடுத்தல் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 செயலாற்றுகை மதிப்பீடு

--------------------------------------

சபையினால் மீளாய்வாண்டின் போது ரூபா 380,000 கிரயத்தில் அமுல் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த 05 நலன்புரி விடயங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ திறமையின்மை

---

(அ) காணிகளை துண்டுகளாகப் பகிர்வு செய்தல் தொடர்பாக சபையினால் பதிவேடு ஒன்று அல்லது கோவையொன்று பேணப்பட்டிருக்கவில்லை. 2011 ஆகஸ்ட் 25 மடகல்ல காணியொன்று துண்டுகளாக பகிர்வதற்காக ரூபா 25,000 தொகையொன்று சபைக்கு கிடைத்திருந்ததுடன் கணக்காய்வு திகதி வரை பலவின வைப்புக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது. காணிகளை துண்டுகளாக பகிர்தல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை.

(ஆ) சபையினால் 2010 – 2013 காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 191 கட்டட விண்ணப்பங்களில் மீளாய்வாண்டு இறுதி வரை இணக்கச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாத 176 இடங்கள் காணப்பட்டன. அதே போல் கட்டட விண்ணப்பங்களின் கால நீடிப்பு பெறாமை பற்றி அல்லது இணக்கச் சான்றிதழ் இன்றி அக்கட்டடங்களை பயன்படுத்துவதற்கு எதிராக அல்லது சபையினால் எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. அத்துடன் இணக்கச் சான்றிதழ் கட்டணம் மற்றும் தாமதக் கட்டணம் அறவீடு செய்தல் தொடர்பாக ஏற்பாடுகள் சபையினால் ஆக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

---

அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளை கடைபிடிக்காமல் சபையினால் வாடகைக்கு பெற்றிருந்த வான் வண்டி ஒன்றிற்காக மீளாய்வாண்டில் 04 மாத காலத்திற்கு எரிபொருள் செலவு என ரூபா 222,887 உம் வாடகை என ரூபா 264,000 உம் சபையினால் செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் வாகன சாரதியாக சபையின் சாரதி ஒருவர் கடமையாற்றியுள்ளார்.

3.4 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

---

ரூபா 150,000 பெறுமதியான கொங்கிரீட் கலவை இயந்திரம் மிளாய்வாண்டின் போது செயற்படுத்தப்படாமல் காணப்பட்டது.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிருவாகம்